**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: **திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1. மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை

**<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.450/2020</u>**

## CASE SUMMARY

| Sl.No. | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded on : Nil<br>Released on : 14.02.2020 (Surrender) | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | 02.09.2020 | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 11.02.2021 | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | Nil | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | Chief | Cross |
| | | PW1 –03.08.2022 | 03.08.2022 |
| | | PW2 – 03.08.2022 | 03.08.2022 |
| | | PW3 – 03.08.2022 | 03.08.2022 |
| | | PW4 – 03.08.2022 | 03.08.2022 |
| | | PW5 – 21.09.2022 | 21.09.2022 |
| | | PW6 – 21.09.2022 | 21.09.2022 |
| | | PW7 – 21.09.2022 | 21.09.2022 |
| | | PW8 – 02.06.2026 | 02.06.2026 |
| 7 | Date of examination of the accused under section 351(1)(b)BNSS of the | 04.06.2026 | |



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:41:54 +0530

| | | |
|---|---|---|
| | Court | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable |

| | | |
|---|---|---|
| **அரசுக்காக: காவல் ஆய்வாளர்,**<br>வடுவூர் காவல் நிலையம்,<br>குற்றஎண். 22/2020,<br>ச/பி.304(A)IPC, | | ..........குற்ற முறையீட்டாளர் |
| | **//எதிர்//** | |
| தர்மராஜன், வயது 42/2020<br>த/பெ.ரெத்தினவேல்,<br>மேல தெரு,<br>எட அன்னவாசல்,<br>மன்னார்குடி. | | ........எதிரி |

இவ்வழக்கானது கடந்த 05.09.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 04.06.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திருமதி.D.துர்காதேவி,B.A.,B.L.,நிலை.2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திரு.S.மணிகன்டன்., B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (17.06.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..............

**//தீர்ப்புரை//**

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.</u>**

04.02.2020 ந் தேதி 09.45 மணிக்கு வடுவூர் காவல் நிலைய சரகம் முக்குளம் தர்க்காஸிலிருந்து தளிக்கோட்டை செல்லும் ரோட்டில் கருவாக்குறிச்சி காலனி நால்ரோடு


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:42:04 +0530

சந்திப்பில் வழக்கில் இறந்துபோன ராஜதுரை தனது TN 50 AV 1635 பதிவெண்கொண்ட TVS Wego இருசக்கர வாகனத்தில் மன்னார்குடி செல்வதற்காக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நால்ரோடு சந்திப்பை கடக்க முயன்றபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 68 N 0708 பதிவெண்கொண்ட Ashok Leyland அரசுப் பேருந்தை ஓட்டி வந்த வழக்கின் எதிரியான தர்மராஜன் என்பவர் தான் ஓட்டி வந்த அரசு பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து ராஜதுரை சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் ராஜதுரைக்கு தலை மற்றும் இடது காலில் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்த ராஜதுரை சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார் என்றும், எனவே ராஜதுரையின் இறப்பிற்கு காரணமான எதிரியின் செய்கையானது பிரிவு 304(A) IPC பிரிவின் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக வடுவூர் காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. நகல் வழங்கல்**

எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு பிரிவு கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரியிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A) IPC ன் கீழ் கு.வி.மு.ச பிரிவு 240(1) ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டன. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் 12 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள்கள் எதுவும் குறியீடு செய்யப்படவோ இல்லை.

**4. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

**அ.சா.1 திருஞானம்** தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது கருவாக்குறிச்சி தெற்கு தெருவில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், விபத்தில் இறந்து போன ராஜதுரை தனது உடன் பிறந்த சகோதரர் ஆவார் என்றும், கடந்த 04.02.2020 ல் தனது தம்பி ராஜதுரை அவரது இருசக்கர வாகனத்தில் மன்னார்குடி வருவதற்காக தளிக்கோட்டை வழியாக வரும்போது கருவாக்குறிச்சி காலனி நான்குரோடு அருகே காலை 09.45 மணியளவில் வரும்போது 36 என்ற வழித்தட எண் கொண்ட பேருந்து வேகமாக வந்து ஒரே வேகமாக வந்து ராஜதுரை மீது மோதியதில் அந்த இடத்திலேயே விழுந்து காயம் அதிகமாக இருந்தது என்றும், காயம்பட்ட ராஜதுரையை கார் மூலம் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம் என்றும், மேற்படி சம்வத்தினத்தன்று வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியவர் பெயர்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:42:12 +0530

விவரத்தை பின்னால் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றும், அவரது பெயர் தர்மராஜ் என்றும், அவர் சம்பவ இடத்தில் இருந்து தப்பித்து ஓடி விட்டார் என்றும், மீனாட்சி மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தோம் என்றும், அங்கு பரிசோதித்த மருத்துவர் ராஜதுரை இறந்து விட்டதாக தகவல் தெரிவித்தார்கள் என்றும், அங்கு தாங்கள் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருக்கும்போது வடுவூர் போலீசார் வந்து விசாரித்தார்கள் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், தான் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.2 குணசேகரன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது கருவாக்குறிச்சி காலனியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 திருஞானத்தை தனக்கு தெரியும் என்றும், விபத்தில் இறந்து போன ராஜதுரையை எனக்கு தெரியும் என்றும், 04.02.2020 ஆம் தேதி கருவாக்குறிச்சி காலனி நான்குரோடு சந்திக்கும் இடத்தில் தானும், அமர்சிங், மாசிலாமணி ஆகியோர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது ராஜதுரை தளிக்கோட்டை செல்வதற்காக வடக்கு திசையில் இருந்து தெற்கு திசை நோக்கி தனது இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றும், அப்போது ஒரு அரசுப்பேருந்து மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி கன்ட்ரோல் இல்லாமல் வந்து ராஜதுரை வந்த இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும், அவ்வாறு மோதியதில் ராஜதுரைக்கு பலத்த காயம் ஏற்பட்டது என்றும், சம்பவத்தன்று மேற்படி அரசுப்பேருந்தை இயக்கிய நபரை தான் பார்க்கவில்லை என்றும், அவர் தப்பித்து ஓடிவிட்டார் என்றும், பின்னிட்டு அன்றையதினம் அரசுப்பேருந்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியது எட அன்னவாசலை சேர்ந்து தர்மராஜ் என்று தெரிந்து கொண்டேன் என்றும், காயம்பட்ட ராஜதுரையை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள் என்றும், பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார்கள் என்றும், அங்கு சிகிச்சையில் பலன் இன்றி இறந்து விட்டார் என்றும், இது சம்பந்தமாக அ.சா.1 கொடுத்த புகாரை போலீசார் தன்னையும் விசாரித்தார்கள் என்றும், தான் நடந்த விவரம் சொன்னேன் என்றும், இறந்த ராஜதுரை உடலில் மீது வடுவூர் போலீசார் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்தபோது தானும் உடன் இருந்தேன் என்றும், ராஜதுரையின் இறப்பானது வாகன விபத்தால் தான் ஏற்பட்டது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.3 மாசிலாமணி** தனது சாட்சியத்தில் தான் தற்போது முக்குளம் தர்க்காசில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா. 1,2 ஐ தனக்கு தெரியும் என்றும், அ.சா.1ன் சகோதரர் ராஜதுரையை தெரியும் என்றும், 04.02.2020 ஆம் தேதி காலை 09.45



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:42:20 +0530

மணியளவில் விவசாய வேலை சம்பந்தமாக தானும், குணசேகரன், அமர்சிங் ஆகியோர்கள் கருவாக்குறிச்சி காலனி நான்குரோடு அருகே பேசிக்கொண்டிந்தோம் என்றும், அப்போது ராஜதுரை தனது இருசக்கர வாகனத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார் என்றும், அப்போது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி அரசுப்பேருந்து வேகமாக வந்து ராஜதுரை மீது மோதியது என்றும், அதில் ராஜதுரைக்கு தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டது என்றும், பின்னிட்டு விசாரிக்கும்போது அன்றைய தினம் அரசுப்பேருந்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியவர் எட அன்னவாசலை சேர்ந்த தர்மராஜ் என்று தெரிந்து கொண்டேன் என்றும், காயம்பட்ட ராஜதுரையை சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள் என்றும், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார் என்றும், அவர் பிரேதத்தின் மீது வடுவூர் போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், தானும் உடன் இருந்தேன் என்றும், அன்றைய தினம் அரசுப்பேருந்தை இயக்கியவர் சம்பவ இடத்தில் இருந்து தப்பித்து ஓடி விட்டார் என்றும், அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும், நடந்த விவரம் சொன்னேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.4 அமர்சிங்க்** தனது சாட்சியத்தில் தான் தற்போது கருவாக்குறிச்சி காலனியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 திருஞானத்தை தனக்கு தெரியும் என்றும், விபத்தில் இறந்து போன ராஜதுரையை தனக்கு தெரியும் என்றும், 04.02.2020 ஆம் தேதி காலை 9.30-10.00 மணியளவில் கருவாக்குறிச்சி காலனி தனது வீட்டுக்கு அருகாமையில் தானும், மாசிலாமணி, குணசேகரன் ஆகிய மூவரும் பேசிக்கொண்டு நின்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது நான்குரோடு கிழக்கில் இருந்து அரசுப்பேருந்து பஸ் வடக்கில் இருந்து பைக்கில் வந்த ராஜதுரையை திடீரென்று மோதியது என்றும், தான் சத்தம் கேட்டு பார்த்தேன் என்றும், அப்போது ராஜதுரை அடிப்பட்டு பிரண்டு கிடந்தார் என்றும், பலத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றும், பஸ்ஸின் கன்டக்டர், டிரைவர் இருவரும் இறங்கி தெற்கே ஓடிக்கொண்டிருந்தார்கள் என்றும், அடிப்பட்ட நபரை பார்த்ததால் தான் டிரைவரை சரியாக அடையாளம் காணவில்லை என்றும், காயம்பட்ட ராஜதுரையை சிகிச்சைக்காக தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு போனோம் என்றும், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தோம் என்றும், அங்கு அவர் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார் என்றும், அவர் பிரேதத்தின் மீது வடுவூர் போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், தானும் உடன் இருந்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.5 மந்திரிகுமார்** தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது கருவாக்குறிச்சி காலனியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், விபத்தில் இறந்து போன ராஜதுரையை தனக்கு தெரியும் என்றும், 04.02.2020 ஆம் தேதி காலை சுமார் 08-08.30 மணியளவில் கருவாக்குறிச்சி காலனி நால்ரோடு அருகில் உள்ள கோவில் வாசலில் தான் தனது நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன் என்றும், அப்போது ராஜதுரை தனது இருசக்கர வாகனத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றும், அப்போது அரசுப்பேருந்து கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வேகமாக வந்து இருசக்கர வாகனத்தில் வந்த ராஜதுரை மீது மோதியது என்றும், அவ்வாறு பேருந்து ராஜதுரை மீது மோதியதில் அவரது தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டது என்றும், அன்றைய தினம் பேருந்தை ஓட்டியது தர்மராஜ் என்று சொன்னார்கள் என்றும், காயம்பட்ட ராஜதுரையை சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றேன் என்றும், சிகிச்சை பலன் இன்றி ராஜதுரை மறு நாள் இறந்து விட்டார் என்றும், இது சம்பந்தமாக அ.சா. 1 கொடுத்த புகாரில் போலீசார் தன்னை விசாரிக்க தன் நடந்த விவரம் சொன்னேன் என்றும், இறந்து போன ராஜதுரை பிரேதத்தின் மீது வடுவூர் போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், நானும் உடன் இருந்தேன் என்றும், ராஜதுரைக்கு இந்த விபத்தின் காரணமாக தான் அவர் இறந்து போய்விட்டார் என்றும், போலீசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.6 அன்புநாதன்** தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது கருவாக்குறிச்சி காலனியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா. 1 முதல் 4 ஐ எனக்கு தெரியும் என்றும், விபத்தில் இறந்து போன ராஜதுரையை தனக்கு தெரியும் என்றும், சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை வயலுக்கு சென்றபோது கருவாக்குறிச்சி காலனி அருகில் முக்குளம் செல்லும் நால்ரோடு சாலையில் அரசுப்பேருந்து கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்தது என்றும், ராஜதுரை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி தனது இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றும், அப்போது திடீரென ஒரு சத்தம் கேட்டது என்றும், அந்த இடத்திற்கு பக்கத்தில்தான் தனது வயல் உள்ளது என்றும், அந்த இடத்திலேயே பஸ் நின்றது என்றும், தான் சென்று பார்த்தபோது ராஜதுரைக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது, அவரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சிக் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையொப்பத்தை வடுவூர் போலீசாரிடம் நால்ரோடு, பேருந்து நின்ற இடத்தில் வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள், சாட்சிக் கையொப்பம் போடச்சொன்னார்கள் என்றும், தானும் சாட்சிக் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், பார்வை மகசரில் கண்டுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:42:34 +0530

**அ.சா.7 தர்மாராஜ்** தனது சாட்சியத்தில் தான் தற்போது முக்குளம் சாத்தனூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா.5 ஐ தனக்கு தெரியும் என்றும், விபத்தில் இறந்து போன ராஜதுரையை தனக்கு தெரியும் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சிக் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி பார்வை மகசரில் கண்டுள்ள தனது கையொப்பத்தை 2020 ஆம் வருடம் 2 வது மாதத்தில் ஒரு நாள் கருவாக்குறிச்சி காலனி, தர்க்காஸ், நால்ரோடு என்ற இடத்தில் வடுவூர் போலீசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள், சாட்சிக் கையொப்பம் போடச்சொன்னார்கள் நானும் சாட்சிக் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், பார்வை மகசரில் கண்டுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.8 பசுபதி -காவல் ஆய்வாளர்** தனது சாட்சியத்தில் தான் தற்போது தஞ்சாவூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதால் **(காணொளி மூலம் சாட்சியம் அளிக்க வேண்டுகோள் வைக்கப்பட்டு வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டு தற்போது தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்ற காணொளி அறையில் இருந்து Remote Co-ordinator சி.மணிகண்டன், Assistant Programmer Principal District Court, Thanjavur அவர்கள் தஞ்சாவூர் மாவட்ட நீதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்டு அவரது முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளது**) என்றும், கடந்த 04.02.2020 ம் தேதியன்று காவல் உதவி ஆய்வாளர் திவ்யா நிலைய பொறுப்பில் இருந்த போது 13.45 மணிக்கு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த ராஜதுரை சுயநினைவில் இல்லாமல் இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்த அவரது அண்ணன் திருஞானம் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று வந்து 04.02.2020 ம் தேதியன்று 17.00 மணிக்கு நிலைய குற்ற எண்.22/2020 ச/பி 279, 337 இ.த.ச ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் 04.02.2020 தேதியன்று 17.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அன்புநாதன் மற்றும் தர்மராஜ் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைப்படம் தயார் செய்துள்ளார் என்றும், சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார் என்றும், பார்வை மகசர் மற்றும் வரைப்படம் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பட்டியல் சாட்சி 1 முதல் 7 நபர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 05.02.2020 ம் தேதியன்று சிகிச்சையில் இருந்த ராஜதுரை இறந்துவிட்டபடியால் வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 ல் இருந்து 304(A)இதச ஆக பிரிவு



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:42:41 +0530

மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், மேற்படி சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேல் விசாரணைக்காக தன்னுடைய பார்வைக்கு வைக்கப்பட்டது என்றும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தான் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று இறந்து போன ராஜதுரை பிரேதத்தின் மீது பிணவறை முன்பாக சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணைக்கு உட்படுத்தினேன் என்றும், அறிக்கையும் தயார் செய்தேன் என்றும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பிரேதத்தினை சடல கூராய்விற்காக மருத்துவர் வசம் ஒப்படைத்தேன் சடலகூராய்விற்கு பின்னிட்டு உறவினர்கள் வசம் ஒப்படைத்தேன் என்றும், சாட்சிகள் குணசேகரன், அமர்சிங், திருஞானம், மாசிலாமணி, மந்திரிகுமார் மற்றும் அன்புநாதன், ராஜாங்கம், கருணாநிதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பிரேத பரிசோதனைக்கு பின் அன்றையதினம் மாலை சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டேன் என்றும், சம்பவ இடம் தொடர்பாக உதவி ஆய்வாளர் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படத்தில் இருந்ததால் தான் தனியாக தயார் செய்யவில்லை என்றும், பார்வை மகசர் சாட்சி தர்மராஜ் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 07.02.2020 ம் தேதியன்று எதிரி வாகனமான TN68 N 0708 அரசு பேருந்தை வாகன ஆய்வுக்கு அனுப்பினேன் என்றும், 14.02.2020 ம் தேதியன்று வழக்கின் எதிரியான தர்மராஜ் மன்னார்குடி நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுள்ளார் என்றும், 18.02.2020 ம் தேதியன்று வழக்கில் இறந்துபோன ராஜதுரை இருச்சக்கர வாகன TN 50 AV 1635 TVS Wego இருச்சக்கர வாகனத்தை வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், 06.03.2020 ம் தேதியன்று உதவி ஆய்வாளர் திவ்யாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 04.05.2020 ம் தேதியன்று விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களுக்கு ஆய்வு சான்று பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர்களை கருப்பணன் மற்றும் சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.9 மற்றும் 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இறந்த நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் மீனாட்சி மருத்துவமனை டாக்டர் இந்துஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேற்படி நபருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பிரேத பரிசோதனை செய்து மருத்துவர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்கு ஆஜர் செய்து பிரேத பரிசோதனைக்கு பின் உறவினார் வசம் ஒப்படைத்த நிலைய முதல் நிலைய காவல் 490 செல்வகுமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 304(A)ன் கீழ்

தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

**5. எதிரியிடம் 351(1)(b) BNSS ன் கீழ் வினவுதல் :**

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் :**

இந்த வழக்கில் எதிரி மீது பிரிவு 304(A)IPC ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

**7.** எதிரி மீது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு வழக்கானது நிரூபிக்கப்படவில்லை என்றும், அதனால் எதிரி விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**8.** இந்நீதிமன்றத்தால் இவ்வழக்கின் எதிரி மீது பிரிவு 304(A) IPC கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் 8 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சி 8,9,10,11,12,13 அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை சாட்சியான காவல் ஆய்வாளர் பசுபதி அவர்கள் அ.சா.8 ஆக விசாரணை செய்யப்பட்டும், அசா.4 முதல் அசா.12 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**9.** இவ்வழக்கில் புகார்தாரராக அ.சா. 1 ஆகவும், கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2,3,4,5 ஆகவும், பார்வை மகசர் சாட்சியாக அ.சா.6,7 ஆகவும், விசாரணை அதிகாரியாக அ.சா.8 பசுபதி, காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரிக்கபட்டுள்ளார்கள்.

**10.** இந்நிலையில் எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுடன் நிரூபிக்கபட்டுள்ளதா? என்பதை தீர்மானித்தாலே இவ்வழக்கின் முடிவிற்கு போதுமானதாக இருக்கும்.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:42:54 +0530

**11. குற்றச்சாட்டுகளுக்கான தீர்வு**

கடந்த 04.02.2020 ந் தேதி 09.45 மணிக்கு வடுவூர் காவல் நிலைய சரகம் முக்குளம் தர்க்காஸிலிருந்து தளிக்கோட்டை செல்லும் ரோட்டில் கருவாக்குறிச்சி காலனி நால்ரோடு சந்திப்பில் வழக்கில் இறந்துபோன ராஜதுரை தனது TN 50 AV 1635 பதிவெண்கொண்ட TVS Wego இருசக்கர வாகனத்தில் மன்னார்குடி செல்வதற்காக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நால் ரோடு சந்திப்பை கடக்க முயன்றபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 68 N 0708 பதிவெண்கொண்ட Ashok Leyland அரசுப் பேருந்தை ஓட்டி வந்த வழக்கின் எதிரியான தர்மராஜன் என்பவர் தான் ஓட்டி வந்த அரசு பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து ராஜதுரை சென்ற இருசக்கர வாகனத்தில் மீது மோதியதில் ராஜதுரைக்கு தலை மற்றும் இடது காலில் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்த ராஜதுரை சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார் என்றும், எனவே ராஜதுரையின் இறப்பிற்கு காரணமான எதிரியின் மீது இ.த.ச சட்டப்பிரிவுகள் 304(A)IPC-ன் கீழான குற்றச்சாட்டை பரிசீலனை செய்கையில்.....

அரசுத்தரப்பு வழக்கின் படி சம்பவ தேதி 04.02.2020 அன்று காலை 09.45 மணி என்றும் தகவல் கொடுக்கப்பட்ட தேதி 04.02.2020 17.00 மணி என்றும், சம்பவ இடமானது கருவாக்குறிச்சி காலனி, நால்ரோடு சந்திப்பில் - வடுவூர் காவல் நிலையத்திலிருந்து 16.00 கி.மீ. தென்கிழக்கில் என்று ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கை 06.02.2020 ம் தேதி காலை 11.40 மணிக்கு நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கின் படி 04.02.2020 ம் தேதி 17.45 மணிக்கு சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டதாக அ.சா.ஆ.5 மூலம் தெரியவருகிறது.

12.அரசுதரப்பின் வழக்கின் படி முக்குளம் தர்க்காஸிலிருந்து தளிக்கோட்டை செல்லும் ரோட்டில் கருவாக்குறிச்சி காலனி நால்ரோடு சந்திப்பில் வழக்கில் இறந்துபோன ராஜதுரை தனது TN 50 AV 1635 பதிவெண்கொண்ட TVS Wego இருசக்கர வாகனத்தில் மன்னார்குடி செல்வதற்காக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நால் ரோடு சந்திப்பை கடக்க முயன்றபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 68 N 0708 பதிவெண்கொண்ட Ashok Leyland அரசுப் பேருந்தை ஓட்டி வந்த வழக்கின் எதிரியான தர்மராஜன் அதிவேகமாகவாவும், கவனக்குறைவாகவும் வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதாகும்.

13. இவ்வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கபட்ட திருஞானம் தனது முதல் விசாரணை


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:43:01 +0530

சாட்சியத்தில் "கடந்த 04.02.2020 ல் தனது ராஜதுரை அவரது இருசக்கர வாகனத்தில் மன்னார்குடி வருவதற்காக தளிக்கோட்டை வழியாக வரும்போது கருவாக்குறிச்சி காலனி நான்குரோடு அருகே காலை 09.45 மணியளவில் வரும்போது 36 என்ற வழித்தட எண் கொண்ட பேருந்து வேகமாக வந்து ஒரே மோதாக வந்து ராஜதுரை மீது மோதியதில் அந்த இடத்திலேயே விழுந்து காயம் அதிகமாக இருந்தது என்றும், காயம்பட்ட ராஜதுரையை கார் மூலம் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம் என்றும், மேற்படி சம்வத்தித்தன்று வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியவர் பெயர் விவரத்தை பின்னால் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றும், அவரது பெயர் தர்மராஜ் என்றும், அவர் சம்பவ இடத்தில் இருந்து தப்பித்து ஓடி விட்டார் என்றும், மீனாட்சி மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தோம் என்றும், அங்கு பரிசோதித்த மருத்துவர் ராஜதுரை இறந்து விட்டதாக தகவல் தெரிவித்தார்கள் என்றும்" சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.1 திருஞானம் தனது குறுக்கு விசாரணையில் தஞ்சாவூரில் "தனது சகோதரர் இறந்தவுடன் வடுவூர் வந்து புகார் கொடுத்தோம் என்றால் சரிதான் என்றும், மேற்படி பட்டியல் சாட்சிகளை புகார் கொடுப்பதற்காக தான், தான் ஆள் இல்லாததால் உடன் அழைத்துச் சென்றேன் என்றால் சரிதான். தான் சொன்னதன் அடிப்படையில் தான் காயம்பட்ட விபரம் அவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான்" என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

14. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 குணசேகரன் தனது முதல் விசாரணையில் "கடந்த 04.02.2020 ஆம் தேதி கருவாக்குறிச்சி காலனி நான்குரோடு சந்திக்கும் இடத்தில் தானும், அமர்சிங், மாசிலாமணி ஆகியோர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது ராஜதுரை தளிக்கோட்டை செல்வதற்காக வடக்கு திசையில் இருந்து தெற்கு திசை நோக்கி தனது இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றும், அப்போது ஒரு அரசுப்பேருந்து மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி கன்ட்ரோல் இல்லாமல் வந்து ராஜதுரை வந்த இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும், அவ்வாறு மோதியதில் ராஜதுரைக்கு பலத்த காயம் ஏற்பட்டது என்றும், சம்பவத்தன்று மேற்படி அரசுப்பேருந்தை இயக்கிய நபரை தான் பார்க்கவில்லை என்றும், அவர் தப்பித்து ஓடிவிட்டார் என்றும், பின்னிட்டு அன்றையதினம் அரசுப்பேருந்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியது எட அன்னவாசலை சேர்ந்து தர்மராஜ் என்று தெரிந்து


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:43:11 +0530

கொண்டேன் என்றும், காயம்பட்ட ராஜதுரையை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள் என்றும் " என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் "சத்தம் கேட்டு ஓடிப்போய் பார்த்தோம் அடிப்பட்டுகிடந்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன் "என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா 2 குணசேகரன் அரசு பேருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றதாக திசையை மாற்றி சாட்சியம் அளித்துள்ளார். மேலும். விபத்து நடந்த விதம், விபத்தில் இறந்தவருக்கு ஏற்பட்ட காயம் குறித்தும், எதிரி குறித்தும், விபத்திற்கு யாருடைய கவனமின்மை காரணம் என்பது குறித்தும் சாட்சியமளிக்கவில்லை.

15. அரசுத்தரப்பில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 மாசிலாமணி தனது குறுக்கு விசாரணையில் "சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நான்கு ரோட்டில் தான் கீழ்ப்புறமாக நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி தகவலை போலீசார் விசாரிக்கும்போது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான்குரோட்டின் வடபுறம் தர்க்காஸ் சாலை என்று சொன்னால் சரிதான். ராஜதுரை அடிப்பட்டு கிடந்தார் என்று சொன்னால் சரிதான்.போலீசார் சொன்னதன் அடிப்படையில் தான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான தகவல் தனக்கு தெரியும் என்றால் சரிதான். ராஜதுரை தனது உறவினர் என்பதால் அவருக்கு வாகன இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக முதல் விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தொடர்படுத்தி தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அ.சா. 3 மாசிலாமணி விபத்து நடந்த விதம், எதிரி குறித்தும், விபத்திற்கு யாருடைய கவனமின்மை காரணம் என்பது குறித்தும் சாட்சியமளிக்கவில்லை.

16. அரசுத்தரப்பில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 அமர்சிங் தனது குறுக்கு விசாரணையில் "மேற்கிலிருந்து -கிழக்கு நோக்கி செல்லும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லக்கூடிய நான்கு ரோடு என்று சொன்னால் சரிதான். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லக்கூடிய ரோட்டில் தான் விபத்து ஏற்பட்டது என்ற செய்தியை போலீசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் ஆம். வழக்கு விபத்தானது தளிக்கோட்டை- மன்னார்குடி சாலையில்தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான் "என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.4 அமர்சிங் விபத்து நடந்த விதம், எதிரி குறித்தும், விபத்திற்கு யாருடைய கவனமின்மை விபத்துக்கு காரணம் என்பது குறித்தும் சாட்சியமளிக்கவில்லை.

17. அரசுத்தரப்பில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 மந்திரிகுமார் "தனது



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:43:18 +0530

குறுக்கு விசாரணையில் தான் சம்பவத்தை காளியம்மன் கோவில் வாசலில் நின்று பார்த்தேன். இக்கோவில் வாசல் கிழக்குப்பார்த்து உள்ளது.இந்த விவரத்தை போலீசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து தான் நின்று கொண்டிருந்த கோவில் சுமார் 300 மீ துாரத்தில் உள்ளது. தான் சொன்ன துாரத்தில் இருந்து மேற்படி சம்பவத்தை பார்த்திருக்க வாய்ப்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

18. அ.சா .5 மந்திரி குமார் விபத்து நடந்த விதம், எதிரி குறித்தும், விபத்திற்கு யாருடைய கவனமின்மை விபத்துக்கு காரணம் என்பது குறித்தும் சாட்சியமளிக்கவில்லை. மேலும், அவர் 300 மீட்டருக்கு அப்பால் இருந்து விபத்து கண்ணுற்றார் என்பதும் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை.

19. அ.சா.6 அன்புநாதன் & அ.சா.7 தர்மராஜ் ஆகியோர்கள் பார்வை மகஜர் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

20. அ.சா.ஆ.6 மாதிரி வரைபடத்தை பார்வையிடுகையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் ரோட்டின் இடது புறமாக சென்றுள்ளதும், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்ற அரசு பேருந்து இடதுபுற ஓரமாக சென்றுள்ளதும் தெரிய வருகிறது.

21.மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் Rear tail light, left side door and rear left side foot rest damaged and i am of opinion that the accident was not due to any mechanical defect in the vehicle.

மேலும்,அரசு தரப்பு சாட்சிகள் 1 முதல் 7 வரையான சாட்சிகளை பரிசீலனை செய்த வகையில் இறந்து போன ராஜதுரை சம்பவ இடம் நான்கு ரோடுகள் சந்திக்கும் சாலையில் சாலைவிதிகளை பின்பற்றி சைகை செய்து வந்தார் என்பதும் அவ்வாறு இருந்தும் எதிரியானவர் அதிவேகமாகவும் கவன குறைவாகவும் TN 68 N 0708 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினர் என்று குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மேலும், அ.சா.2 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாக வந்தார் என்று மட்டுமே சாட்சியமளித்துள்ளார்கள். அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் எந்த வேகத்தில் ஓட்டி வந்தார் என்று குறித்தும், அவருடைய கவன குறைவு குறித்தும் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.

22. மேற்கண்ட சாட்சியத்தினை பரிசீலனை செய்த வகையில் எதிரி விபத்தின்போது அவர் வந்த சாலையில் அஜாக்கிரதையாகவும், வாகனத்தினை ஓட்டி வந்தாரா? என்று சந்தேகம் எழுகிறது. மேற்படி இவ்வழக்கில் வாட்சிகள் யாருமே நடந்த வழக்கு சம்பவத்தினையோ எதிரி அஜாக்கிரதையாகவும் வாகனத்தினை ஓட்டி விபத்தை



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:43:29 +0530

ஏற்படுத்தினார் என்பதனை நிரூபிக்க போதுமானதாக சாட்சியாக இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

23. எனவே அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு எந்த வகையிலும் வலுவூட்டுவதாகவும் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க போதுமானதாகவும் இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கிளிலிருந்து எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றத்தை மெய்ப்பிக்கும் வகையில், எதிரி அஜாக்கிரதையாகவோ வந்ததாக குறிப்பிட்டு சாட்சியம் யாரும் அளிக்க முன் வராததால் எதிரிதான் மேற்படி விபத்திற்கு காரணம் என்பதை மெய்ப்பிக்க போதுமான சாட்சியங்களாக இல்லை என்பதிலிருந்து எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டதாக கருத இயலாதென்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

24. இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீது பிரிவு 304(A)IPC -ன் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு பிரிவு 278(1) BNSS ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

25.இவ்வழக்கில் வழக்கு தடயச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்த உத்தரவு ஏதும் இல்லை.

26. எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:43:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**1.புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சாட்சி :**

| சாட்சியின் வரிசை எண். | சாட்சியின் பெயர் | குறிப்பு |
|---|---|---|



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:43:56 +0530

| | | |
|---|---|---|
| அசா.1 | திருஞானம் | புகார்தாரர் சாட்சி |
| அசா.2 | குணசேகரன் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| அசா.3 | மாசிலாமணி | கண்ணுற்ற சாட்சியாக |
| அசா.4 | அமர்சிங் | கண்ணுற்ற சாட்சியாக |
| அசா.5 | திரு.மத்திரிகுமார் | கண்ணுற்ற சாட்சியாக |
| அசா.6 | திரு.அன்புநாதன் | பார்வை மகசர் |
| அசா.7 | திரு.தர்மராஜ் | பார்வை மகசர் |
| அசா.8 | பசுபதி-காவல் ஆய்வாளர் | விசாரணை அதிகாரியாக |

**2.புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| **சான்றாவணங்களின் வரிசை எண்.** | **தேதி** | **சான்றாவணம் குறிப்பு** | **சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 04.02.2020 | புகார் வாக்குமூலம் | அ.சா.1- மூலம் |
| அ.சா.ஆ. 2 | 04.02.2020 | பார்வை மகசர் உள்ள கையொப்பம் | அ.சா.6- மூலம் |
| அ.சா.ஆ. 3 | 04.02.2020 | பார்வை மகசர் உள்ள கையொப்பம் | அ.சா.7-மூலம் |
| அ.சா.ஆ. 4 | 04.02.2020 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8- மூலம் |
| அ.சா.ஆ. 5 | 04.02.2020 | பார்வை மகசர் | அ.சா.8- மூலம் |
| அ.சா.ஆ. 6 | 04.02.2020 | வரைப்படம் | அ.சா.8- மூலம் |
| அ.சா.ஆ. 7 | 04.02.2020 | சட்ட பிரிவு மாற்று அறிக்கை | அ.சா.8- மூலம் |
| அ.சா.ஆ. 8 | 05.02.2020 | பிரேத விசாரணை | அ.சா.8- மூலம் |



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 11:44:04 +0530

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கை | |
| அ.சா.ஆ. 9 | 07.02.2020 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (TN68 N 0708)-அரசு பேருந்து | அ.சா.8- மூலம் |
| அ.சா.ஆ. 10 | 18.02.2020 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (TN50-AV-1635 - TVS Wego) | அ.சா.8- மூலம் |
| அ.சா.ஆ. 11 | 04.02.2020 | விபத்து பதிவேடு | அ.சா.8- மூலம் |
| அ.சா.ஆ. 12 | 05.02.2020 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.8- மூலம் |

3. **அரசு தரப்பு சான்று பொருள் :1)** இல்லை

4.எதிரி தரப்பு சாட்சிகள்,சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்: இல்லை

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.06.17 11:44:19 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

மன்னார்குடி.

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்கள்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

திருவாரூர்.


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.06.17 11:44:27 +0530

சி.சி.எண்.303/2020 நாள் 15.05.2026

**தீர்ப்புரை பகரப்பட்டது.**

இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீது

பிரிவுகள் 294(b), 324, 506(2) IPC ன் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

இவ்வழக்கில் வழக்கு தடயச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்த உத்தரவு ஏதும் இல்லை.எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.